உளி- 1 | ஓசை-78 | நவம்பர்-2023 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

அரசு பதிவெண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607002

படைப்பு பிரைவேட் லிமிட்டட்,
#12/6, மூன்றாம் தளம்,
வெல்வோர்த் ப்ராபர்ட்டீஸ்,
7 வது தெரு , டாக்டர் சுப்பாராயன் நகர்,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
admin@padaippu.com
✆91 7338897788 / 7338847788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| அமுதா தமிழ் நாடன் | - 4 |
| நிலவை பார்த்திபன் | - 5 |
| ச.ஆனந்தகுமார் | - 5 |
| தி.கலையரசி | - 6 |
| கா.வெங்கடேஸ்வரன் | - 7 |
| கலைச்செல்வி | - 8 |
| கோ. பாரதிமோகன் | - 9 |
| குமரன்விஜி | - 10 |
| ஐ.தர்மசிங் | - 11 |
| பூங்கோதை கனகராஜன் | - 11 |
| ஹிதாயத் | - 12 |
| மெஹராஜ்பேகம் | - 13 |
| த.முருகன் | - 13 |
| மேகா மிர்ஷா | - 14 |
| மா. காளிதாஸ் | - 15 |
| சந்துரு RC | - 16 |
| மகேஷ் சிபி | - 17 |
| சுயம்பு | - 18 |
| ஆ.சார்லஸ் | - 19 |
| குபோதினி | - 19 |
| ராஜலட்சுமி | - 20 |
| க. புனிதன் | - 21 |
| முகமது பாட்சா | - 22 |
| சுஜாதா கண்ணன் | - 22 |
| ஆத்மாஜீவ் | - 23 |
| ஹைக்கூ உமா | - 24 |
| பிரபுசங்கர்.க | - 25 |
| தங்கேஸ் | - 26 |
| இயலிசம் | - 26 |
| காசாவயல் கண்ணன் | - 27 |
| வணவை தூரிகா | - 27 |
| வினோத் பரமானந்தன் | - 28 |
| சங்கரி சிவகணேசன் | - 29 |
| ஷப்ரா இல்முத்தீன் | - 30 |
| உமா மஹேஸ்வரி பால்ராஜ் | - 30 |
| கதிரவன் வீ | - 31 |
| சக்தி அருளானந்தம். | - 32 |
| பரமேஸ்வரிசண்முகம் | - 33 |
| இசைவிழிசந்திரன் | - 34 |
| சகா | - 35 |
| ச. இராஜ்குமார் | - 35 |
| செ.பாலா | - 35 |
| ஷபானா ஆதம்லெப்பை | - 36 |
| அன்பு மணிவேல் | - 37 |
| மு.முபாரக் | - 37 |
| பிரியா பாஸ்கரன் | - 38 |
| லக்ஷ்மி | - 39 |
| கோவை புதியவன் | - 39 |



கதவுக்கு பின்
கனவு வளர்த்து
உணர்வுகளை
விறகாக்கி
அடுப்பு மூட்டி
கூட்டு குடும்பத்தின்
சுமை தாளாமால்
மூச்சு திணறும்
அம்மாவிற்கு
நல்லத்தங்காளின்
சாயல்

படித்து வாங்கிய
பட்டத்தைக் கைகால்
முறித்துப் போட்டு
தாலிக்குக் கூலியாய்
அப்பாவை மொட்டையடித்து
காணி நிலத்தை எழுதி
தரும் வரை
மலடியாகவே
வைத்திருந்த
புகுந்த வீட்டு புத்தர்களை
கோர்ட்டில் நிறுத்திய
என் தோழிக்கு
கண்ணகியின் சாயல்.

கூலி பணத்தில்
மதுப் புட்டி வாங்கி
நைந்து போன
முந்தானைக்குள் ஒளித்து
கொண்டவனுக்காய்
எடுத்து செல்லும்
பார்வதி அத்தைக்கு
நளாயினியின் சாயல்

சிறகு முளைத்த
எண்ணங்களுக்கு
வண்ணந்தீட்டி
வன்புணர்வற்ற உலகம்
சமைத்து
பெண்ணடிமை பேசும்
முடர்களின் ஆணிவேர்
அறுத்து
விடியப் போகும்
நாளைகளிடம்
என்
மகளின் சாயல்.

**அமுதா தமிழ் நாடன்**



அர்ச்சனைத் தட்டிலிருந்து
அர்ச்சகர் தட்டுவரை
சிறப்பு தரிசன கட்டணத்தோடு சேர்த்து
சில நூறுகள் செலவழித்தாகிவிட்டது!

உண்டகட்டி உண்ட கையோடு
உண்டியலிலும் காசு போட்டாகிவிட்டது!

இனி வாசலில் யாசகம் கேட்போருக்காக
இருக்கவே இருக்கிறது

“உழைச்சு சாப்பிடுங்கப்பா”
எனும் உன்னத அறிவுரை!

நிலவை பார்த்திபன்

ஆன்மாவின் வெகுநாளைய தேடலில்
கிடைத்த எண்ணை அழைக்க முன் போவதும் திரும்ப
வருவதுமான
நெடிய ஊஞ்சல் விளையாட்டை
முடித்து வைக்கிறது தயக்கங்கள்
தின்ற பிரியங்கள்..
அலைக்கற்றையில் மொழிபெயர்ந்து குரலாக
உருமாறிய
சிலிர்ப்பின் நொடிகளில்
கண்மூடிய மௌனத்தின் கண்ணீர்
திரவத்தில் ததும்பி வழிகிறது
வாரத்தைகளற்ற அதே பிரியங்கள்..

ச.ஆனந்தகுமார்



என் வறண்ட நிலம்
கண்ணீர் மழையில் நனைகிறது
இனி இதில் எது பூக்கும் ?
முள்ளா? மலரா?

தாகம்
தாகிக்கும் போது
உன் நினைவின் சுவையில்
மதுவாகி விடுகிறது.

காதல் எனது தீவு
அது
கண்ணீரால் சூழப்பட்டிருக்கிறது.

காதல்
ஓர் அபூர்வ ரசவாதம்
அமுதமும் நஞ்சும் கலந்து
நம்மை நமக்கு வழங்குகிறது.

உன் கரத்தில் இருக்கும்
ஜெபமாலை நான்.
உன் சுவாசங்களில்
என் ஆயுளை எண்ணிக் கொண்டிருக்கிறாய்.

கூர்தீட்டிய பார்வையை
கொஞ்சம் எறி !
உன் பலி பீடத்தில்
மண்டியிடுகிறது எனது கஸல்.

தி.கலையரசி



பட்டுப்போன மரம்
விழவேயில்லை
குருவிக்கூடு.

பட்டுப்போன மரம்
பச்சையாகவே இருக்கிறது
படர்ந்த கொடி.

பட்டமரம் பூத்திருக்கு
புகைப்படகாரனின்
கைவண்ணம்.

பட்டுப்போன மரத்தில்
பரவசமான குரல்
பறவையின் குஞ்சுகள்.

பட்டுப்போன மரம்
பார்த்ததில் மகிழ்ச்சி
கரிக்கடைகாரனுக்கு.

பட்டுப்போன மரம்
உறிஞ்சுக்கொண்டேயிருக்கிறது
தன் நிழலை.

பட்டுப்போன மரம்
உடையாமல் விழுகிறது
வெயில்.

பட்டுப்போன மரம்
பசியாறிக்கொண்டது
ஏழையின் அடுப்பு.

பட்டுப்போன மரம்
தடை உடைத்தது
பெய்யும் மழைக்கு.

**கா.வெங்கடேஸ்வரன்**

# பார்வை



அடைமழைக்குப் பின்  சுள்ளென்று அடிக்கிறது
வெயில்...

நனைந்த துணிகளை
மறுபடி காயப்
போட்டுக்கொண்டிருக்கிறாள் அம்மா..

மழை கழுவிப் போன
மண்வெட்டியையும்
சாணிக்கூடையையும்
மிச்சத் தண்ணீர் கவிழ்த்து
பத்திரப்படுத்துகிறார் அப்பா..

பெய்த மழையை
ரசித்து ரசித்து
கவிதை எழுதிக் கொண்டிருக்கிறான் அண்ணன்....

கடைசி அறையில் பாடம் படித்துக் கொண்டிருந்த
அக்காவை ஜன்னல் வழியாக எட்டிப்பார்க்கிறது
சுரீர் வெயில்..

வெயிலுக்கு
கைபிடிக்கிறாள் அக்கா
சிவக்கிற விரல்கள் ரசனையில் சேர்கிறது

விரலிடை  தெரிகிற
சின்ன ஓட்டையில்
சின்ன சூரியன் ..
நிச்சயமாய் கவிதை தான் எனக்கு.

**கலைச்செல்வி**

# கஸல்



காதலால் முத்தமிடப்பட்ட என் இதயம்
அவளின் குடியிருப்பாக இருந்த நாளில்
துயரை உறங்கவைத்திருந்தது காலம்

நன்றிக்கான காணிக்கைக்கு
கண்ணீர்த் துளிகளைவிட புனிதம் எது

அவளது சாயலை தானமேற்று
தேனூறிய மலர்
வசந்தத்தை ஏந்தியிருந்த பருவம்
தீ பற்றிய ஒரு கனவானது

கை கூடும் நாளில்
கொள்ளியை உயர்த்தியது எவருடைய கரம்

உண்டா எங்கேனும்
முள்ளும் தம்மோடுதான் பிறந்ததென்பதை
ஒப்பாத ரோஜா

சொல்லுங்கள் எங்கேதான் உள்ளது
நிலமோ விதையோ
ஈரமில்லாமல் போனதன் சாட்சியாவதற்கு
உடைபடப் போகிற இதயத்தின் சபை

களையாத காலத்தின் மௌனம்
அசைக்கிறது
மேலும் கீழுமென என் தலையை

பாவத்தை விதைத்ததன் சாப அறுவடை
என் இருத்தல் இனி

இதோ
உயிரின் மீதான ஆசையில்தான்
காதலிடம் பதுங்கியிருக்கிறது
சாவின் நிழல்

**கோ. பாரதிமோகன்**



ஒரு மனிதனைப் பிடிக்கவில்லை
என்பதை
வெவ்வேறு மொழிகளில் சொல்கிறார்கள்.

ஆக்சிஜன் பையில் காற்று தீருமுன்
சற்று புரிந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் நீங்களாய் இருப்பது
வானவில் வானவில்லாய் இருப்பது
அல்லது
மழையிலும் அடிக்கும் வெயிலாய் இருப்பது
பிழையெனப் பார்க்கப்படலாம்.

தண்டவாளப் பயணப் பொழுதில்
நீர்க் குமிழ் ஊதும் குழந்தைக்கும்
காட்டின் வழிப்போக்கில் புல்லாங்குழல்
ஊதும் குழந்தைக்கும்
வேறுவேறு களம்.

இரயில்பெட்டி கணக்கில் குமிழை ஊதிச்
சேர்க்கையில்
காட்டின் கணக்கில் குழலொலி சேர்ந்துவிடும்

யாரையேனும் யாரோ என்பதற்கு முன்
கொஞ்சம் புரிதல் நிகழ்ந்தாலும் போதும்

கை காட்டும் தூரத்தில் அல்லாமல்
கைக்கெட்டும் அருகாமையில்
பறவை அமர்ந்து கொள்ளும்.

குமரன்விஜி



சலசலக்கும் நீரோடை
அமைதியாக இருக்கிறது
ஆழ்கடல்...

**ஐ.தர்மசிங்**

உச்சி கால பூஜையில்
அர்ச்சனை நடக்கையில் ஏதோ வேண்டி
பெருங்குரலெடுத்து
அழுகிறது குழந்தை

பக்தர்களின் சங்கல்பம் காதில் விழுந்தும் கவனம்
திருப்பி மானசீகமாக குழந்தையின் அழுகையடக்க
ஞானப் பாலூட்டுகிறாள் அம்மன்

**பூங்கோதை கனகராஜன்**



யாருக்கேனும் யாவுமாய் இருந்து விட
விரும்புவீர்களாயின் தயவு செய்து இறுதி வரை
இருந்து விடுங்கள்

கருணை கொள்ளுங்கள்
மன்னித்து விடுங்கள்
தண்டித்து விடாதீர்கள்

உறுதியாய்ப் பிரிந்தே தீர்வதென முடிவெடுத்து
விட்டால் ஒப்புக்கேனும்
நம்பும்படியான ஒரு காரணத்தைச் சொல்லிச்
செல்லுங்கள்

சொன்னாலும் உங்கள் காரணங்கள் ஒருபோதும்
நம்பமுடியாதவையாகத் தான் அவர்களுக்கு
இருக்கிறது போலும்

கடல்களின் உப்புத் தன்மை கூடிக் கொண்டே
போகிறது

மழையின் ஈரத்தில் உதிரத்தின் பிசுபிசுப்பு கூடிக்
கொண்டே போகிறது

காற்றெங்கும் ஏக்கப் பெருமூச்சுகளின் அனற் தகிப்பு
கூடிக் கொண்டே போகிறது

கைவிடப் பட்டவர்களின் கண்ணீர் சூழ்ந்த
புவிவெளியினளவு கூடிக் கொண்டே போகிறது

நிசப்தப் பெருவெளிகளில் மௌனத்தின் விசும்பல்கள்
பெரும் ஓலமாய்க் கேட்டுக் கொண்டே இருக்கிறது

உயிரில் கலப்பது அவ்வளவு எளிதல்ல
கலந்த பின் பிரிப்பது அவ்வளவு சுலபமுமல்ல

தண்டித்து விடாதீர்கள்.....

**ஹிதாயத்**.



தடாகத்தில்
கால் வைக்கும்
சிறுவனை
முத்தமிட சூழும்
சிறுமீன்களுக்கு
என் ஏகாந்தத்தை
சூழ்ந்து கொள்ளும்
உன் நினைவுகளின் சாயல்

**மெஹராஜ்பேகம்**

படித்து வாங்கியப் பட்டம்
உயர்ந்து கொண்டேயிருக்கிறது.
வங்கியில் வட்டிக் கடன்!

**த.முருகன்**



இரவில்
பெய்யும் மழைத்துளிகளுக்கு
கனம் அதிகம்.
ஒவ்வொரு துளியும்
மவுனத்தின்
மொழியாய் விழுகிறது,
ஒவ்வொரு துளியும்
எறும்பின் பாதையில்
ஏவுகணையாய்
விழுகிறது.
ஒவ்வொரு
சன்னல் மழையும்
ஒரு அபரிதமான கனம்.
சன்னல் அளவிலேயே
வீடு என்றால்
ஒவ்வொரு துளியும்
நத்தையின்
ஓட்டில் கல்லெறியும்
கனம்!

**மேகா மிர்ஷா**



எல்லாத் துன்பங்களையும்
குடைந்து தின்றுவிடும் புன்னகை
ஒரு புழு.

தன்னைச் சுற்றிக் கூடமைத்து வண்ணத்துப்பூச்சியாக
வெளிப்படும் போது
புகைப்படக் கருவியாகின்றன கண்கள்.

ஒவ்வொருமுறை புன்னகைக்கும் போதும்
அதுவொரு வழக்கமான
வண்ணத்துப்பூச்சி அல்ல.

அதன் வண்ணங்களைத் தீட்டும் ஓவியன்
மனக்குகையில்
ஆழ்ந்த தியானத்தில் இருக்கிறான்.

வண்ணத்துப்பூச்சியின் கால்களில்
எப்போதும் மகரந்தமாக ஒட்டியிருக்கிறது ஒரு கொத்து
மகிழ்ச்சி.

எறும்புகள் இழுத்துச் செல்லும் சிறகும்
பச்சோந்தியின் வாயில் அகப்பட்ட
முழு வண்ணத்துப்பூச்சியும்
படபடப்பை அதிகரிப்பது இயல்பே.

பூவும் காயும் கனியுமென
பசுமையாக இருக்கிற தோட்டத்தில்
இணையைத் தேடி வருகின்றன
மேலும் சில வண்ணத்துப்பூச்சிகள்.

உங்கள் அறையை விட்டு வெளியேற
நெடுநேரமாகத் தவிக்கிறது
ஒரு வண்ணத்துப்பூச்சி.

அந்த மின்விசிறியைச்
சற்றுநேரம் அணைக்க முடியுமா?

**மா. காளிதாஸ்**

# மழை ருசித்தவள்



மழை வரும்போதே
ஜன்னலை சாத்துகிறாள்
இத்தனைக்கும்
நாளெல்லாம்
சாரலில் நனைந்தவள்
தூரலில் கரைந்தவள்
அடை மழையில் குளித்து
ஆகாயம் வெளுத்தபின்பே
வீட்டுக்கு திரும்புவள்
வருடத்தில் அதிகமாய்
மழை பெய்யும் ஊராய் பார்த்து
மணம் முடிக்க விரும்பியவள்
இப்போதெல்லாம்
மழை வரும்போதே
ஜன்னலை சாத்தி விடுகிறாள்
ஒற்றை அறை குடித்தனத்தில்
தரை நனைத்துச்செல்லும் ஈரத்தில்
இரவெல்லாம் சிணுங்கும்
பிஞ்சு முகம் நினைத்து
ஒருகாலத்தில்
மழையையே குளிப்பாட்டியவள்
இப்போதெல்லாம்
மழை வரும்போதே
ஜன்னலை சாத்திவிடுகிறாள்.

**சந்துரு RC**



நீண்ட நேர
வற்புறுத்தலுக்குப் பின்
என் வீட்டில் மட்டும் தான்
டம்ளரில் வாய் வைத்து
டீ குடிப்பேன்
மற்ற இடங்களில்
அப்படி குடிக்க மாட்டேன் சார்
என்று வெகு இயல்பாய்
சொல்லிவிட்டு
சூடான தேநீரை அண்ணாக்கக்  குடிக்கத்
தொடங்குகிறார்
பள்ளியை சுத்தம் செய்யும் அம்மா
காலம் காலமாய்
கழிசடை சமூகம்
உருவாக்கி வைத்திருக்கும்
அந்த அம்மாவின்
உளவியலை உடைப்பதொன்றும்
எனக்குப் பெரிய விசயமில்லை
இதோ இப்போது
என் குவளையொன்றில்
தேநீர் நிரப்பி நீட்டுகிறேன்

மகேஷ் சிபி



ஆசையாய் கேட்டாயென்று
வாங்கித் தந்தேன்
மல்லிகை பூ,,,
இப்போது எல்லோரும்
உன்னை பார்க்கிறார்கள்
இதில் யார் மல்லி? யார் மங்கை?

என் மீது சந்தேகபடு
சட்டை பிடித்துக் கேள்
யாருடன் தொடர்பு
வைத்திருக்கிறாய் என்று?
நானுன்னிடம் ரசிப்பதே
அந்த சர்வாதிகார காதலைதான்

உனதூர் திருவிழாவிற்கு
என்னை
ஏன் அழைக்கவில்லை என்கிறாய்
எப்படி அழைப்பது ?
திருவிழா உன்னை கொண்டாட தொடங்கி விடுமே

பேனாவை எடுத்து
ஒளித்து வைத்துக் கொண்டு
எனக்கொரு கவிதை எழுது என்கிறாய்
எழுதுக்கள் எழுதாத
கவிதையல்லவா நீ

என்றோ கண்ட சொப்பனத்தில்
உன்னோடு வாழ்ந்து கொண்டிருக்கிறேன்
இன்று வரை,,,,,
நீதான் கனவை கனவாகவே
கலைத்து சென்றாய்

உன் மகளுக்கு குட்டைப் பாவடை
அணிந்து விடுகிறாய் பள்ளிக்கு,
என் கண்களுக்குள் கண்ணீர் உருகி
நீ அணிந்து வந்த குட்டை பாவாடை
காலங்களை நனைக்கிறது

காதலென்பது
எப்போதும் ஒளியாக இருப்பதில்லை
ஆசிட் போலவும் சில நேரம் எரிக்கும்,

வன்ம சொர்க்கம் உண்டென்றால்
அது காதல்தான்

உனக்கு உடைக்கத்தான் தெரியுமென்றால்
பரவாயில்லை,,,
நான் நீர்குமிழியாகவே
இருந்துவிட்டுப் போகிறேன்

ஏனடி திருடினாய்
என் கடிகார முட்களை?
என் பொழுதுகள் ஸ்தம்பிபோய்
உன்னிடத்திலே நிற்கிறதே

சுயம்பு

# சமாதானத் தூதுவர்கள்



நடக்கும் போரை
உடனடியாக நிறுத்த,
சமாதானத் தூதுவர்களாக வந்தன
இரு நாடுகளின்,
புறாக்கள்.

தேவாலயத்தில் இருந்து ஒன்றும்
தொழுகைக் கூடத்திலிருந்து,
மற்றொன்றும்.

தங்களது தூது
செவிமடுக்கப்படாமல் போனதும்,
ஒன்றையொன்று
நேசிக்க ஆரம்பித்தன.

**ஆ.சார்லஸ்**

விழுந்து உடைந்து குமுறி அழுத போது
யாரும் தூக்கிவிட வரவில்லை என்று வருந்தியதே
இல்லை
உடைந்த சிறகுகளைக்கொண்டு தான் பறக்க
முயற்சித்து
முடியாமல் ஊர்ந்து வந்தேன்
ஆனாலும் வலிக்கவே இல்லை
என்னால் இவ்வளவு முடிகிறது என்றே
ஓடிக்கொண்டிருந்தேன்
திடீரென
யாரோ வந்து பாவம் நீ என்பதும்
அப்போதெல்லாம்
தூக்கிவிட்டேனே உன்னை என்பதும் தான்
பயங்கரமாய் வலிக்கிறது
சுயம்பிகளுக்கு ஓர்மம் தானே
வாழ்தலின் நம்பிக்கையே

**குபோதினி**



ஒரு தாளாத சோகத்தை
ஒரு தத்துவப் பாடல் கேட்டு
மீள முடியுமானால்...

ஒரு பெருத்த அவமானத்தை
ஒரு கோப்பை தேநீர் பருகிப் போக்க முடியுமானால்...

ஒரு மீப்பெரு நிராகரிப்பை
ஒரு மென் சாரல் மழையை ரசித்து
மறக்க முடியுமானால்...

ஓர்
அன்பானவர்களின் மரணத்தை
அவர்களின் ஆன்ம இளைப்பாறுதலுக்கு
பிரார்த்தனை செய்து கடக்க முடியுமானால்..

இதுவும் கடந்து போகும்
என்ற தாரக மந்திரத்தை மனதில் ஏற்றி
நம்மை நாமே அடுத்தக் கட்டத்திற்கு
நகர்த்த முடியுமானால்...

அத்தனைக்குப் பிறகும்
இன்னமும் ஏதோ ஒன்று
மீதம் இருக்கத்தான் செய்கிறது,
இவ்வாழ்வை இனியும் வாழ்ந்திட...

**ராஜலட்சுமி**

# நளாயினி பூச்சி



வாழ்வின்
மொத்த கண்ணீரையும்
தேக்கினால்
ஒரு உப்பு கல்லாகும்
வாழ்வின் அனைத்து வாசத்தையும்
இறுத்தினால்
ஒரு அரக்கு ஆகும்
உலகின் மொத்த
ஒளிபடத்தையும் சேமித்தல்
ஒரு போட்டோன் ஆகும்
வாழ்வின் அனைத்து
இசை தொகுப்பை தொகுத்தல்
ஒரு சிலிக்கான் மணல் துகளின்
கீரலாகும்
வாழ்வின் மொத்த
அன்பையும் சேமித்தால்
ஒரு நளாயினி பூச்சியின்
உருவமாகும்

**க. புனிதன்**



முகங்களைப் பற்றி
சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்தோம்.

இந்த கவிதைகள் சிறந்ததென்று
தேர்வுக்குழுவினர் ஒரு மனதாக நிம்மதிப் பெற்றனர்.
காஃபியின் நறுமணம்
வார்த்தைகளைச் சிதைத்திருக்கலாம்...
கன்னியின் வாடை
தெளித்து வறுத்தெடுத்த வெட்டுக்கிளிகளின் இரத்தம்
எந்த நிறம்?
அவர்கள் கைகளைக் குலுக்கிக் கொண்டார்கள்.

ஆளுக்கொரு முகங்களுடன்
நாங்கள் திரும்பும் போது இடம் மாறியிருந்தது
கவிதையின் முகம்.
.

**முகமது பாட்சா**

நான் கட்டிய வீட்டுக்குள்
நட்டு வைத்த தொட்டியில்
எட்டிப் பார்க்கும் கொடிமுல்லை
எல்லை பழகென்று
இழுத்து வைத்தாலும்

பக்கத்து வீட்டில் படர்ந்து கொண்டு என்னைப் பார்த்து
சிரிக்கிறது

சண்டை போடும்
அண்டை வீட்டாருக்கும்
தொண்டு செய்யும்
எங்கள் வீட்டுப் பிள்ளையாய்

**சுஜாதா கண்ணன்**



அப்பொழுது விடிந்திருந்தது.
தெருவிளக்கின் எல்லா விளக்குகளையும்
மங்கச் செய்து விட்ட கதிரொளியை
கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்
மூன்று வயது குழந்தை.

அம்மா உறங்கிக் கொண்டிருந்தாள்
உடல்நிலை சற்று சரியில்லை அவளுக்கு.

அப்பா வேலைக்குச் சென்று விட்டிருந்தார்
விடியற்காலையிலேயே,

குழந்தை சற்றுத் திரும்பி
அம்மாவின் கன்னத்தில் முத்தமிட்டது.
மழலை உதடுகளின் ஸ்பரிசத்தில் விழித்தவள்
சட்டென்று அணைத்துக் கொண்டாள்
பதிலுக்குத் தந்த முத்தத்துடன்.

குழந்தை மீண்டும் சன்னல் வழியாக தெரிந்த
ஒளிமிகுந்த வானத்தைப் பார்த்தாள்
அம்மாவின் கண்களைப் பொருத்திக் கொண்டு.

மிச்சமிருந்த தன் புட்டிப் பாலையெடுத்து
அம்மாவின் வாயில் திணித்தாள்
அதன் செயற்கைக் காம்பை.

இடம் மாறியிருந்தது இப்பொழுது
தாய்மை.

**ஆத்மாஜீவ்**



நீலவானம்
ஆற்றில் குட்டிக்கரணம்போடும்
கிராமத்துச் சிறுவர்கள்!
*
இரவுநேரம்
இருட்டில் மறையும்
நிழல்!
*
உடைக்கப்படும் பூசணி
உயிர்களைக் காவுவாங்கும்
ஆயுதபூசை!
*
விழாக்காலம்
ஆங்காங்கே ஆயத்தமாக நிற்கும்
அவசர ஊர்தி!
*
வறண்ட ஆறு
மணலைத் தோண்ட ஊறும்
வானம்!

**ஹைக்கூ உமா**

# களம்புதிது



அவளும் அவளும்
காதலித்து வந்தார்கள்
அந்த காதலுக்கு
அவர்களைச் சுற்றியிருந்தவர்கள்
ஆழமான நட்பென
பெயரிட்டிருந்தார்கள்
அவள் குடித்த
அதே கோப்பையில்
இவள் தேநீர் குடிப்பாள்
இவளின் ஆடைகளை
அவள் அணிந்து கொள்வாள்
அவள் விரும்பும் திரைப்படம்
இவளுக்கு பிடிக்கும்
இவளது அலைபேசி கடவுச்சொல்
அவளுக்கு தெரியும்
யாருக்கும் தெரியாமல்
உதட்டோடு உதடு வைத்து
முத்தமிட்டுக்கொண்ட நாளில்
பிரளயம் ஒன்று வெடித்தது
அந்த பிரளயத்திற்கு பிறகு
உதயமானது
இரண்டு ஏவாள்கள் கொண்ட
புத்தம் புது உலகம்.....

**பிரபுசங்கர்.க**

# குட்டி குட்டி அலகுகளுக்குள்



குட்டி குட்டி அலகுகளுக்குள்
சிரித்த கடவுளின் முகங்களோடு
பிரபஞ்சங்கள் சுழலும் நாளில்
நாம் சத்தமிட்டு சொல்லலாம்
"கூடென்பது நேசத்தை சேமிக்கும் இடமேயன்றி
ஒரு நாளும் வாடகை வீடல்ல "
கைவசமிருக்கும் சிறு ரொட்டித்துண்டுகளையும்
பசித்த வயிறுகளுக்கு கொடுத்துவிட்டு
இந்த இரவை நாம் பகிர்ந்துண்ணலாம்
வா சகியே
வலிகள் மீது உன் இதழ் பதிக்கும்
முத்தடங்கள்
பசியின் மீது இனிய கவிதை இயற்றட்டும்

**தங்கேஸ்**

வெறும் வாழ்த்துக்களை மட்டும்
வாங்கிக்கொண்டு
வீட்டுக்குள் நுழைந்த
தொழிலாளிக்கு
அதை எப்படி பிரித்துக்கொடுப்பது
என்கிற குழப்பம் தீர்வதற்குள்
தீபாவளி முடிந்திருந்தது.
முதலாளி
இனிப்புக்களையாவது கையில் கொடுத்திருக்கலாம்

**இயலிசம்..**

# தாயன்பு



மலைக்கோவில் அடிவாரத்தில்
கழுத்துமணிகளை ஆட்டியபடி
பொழுதுக்கும் பக்தர்களை
ஆசிர்வதித்து
சின்னக் குழந்தைகள்
அருகில் வரும்போதெல்லாம்
ஆகப் பெரிய தும்பிக்கையை
மயிலிறகாக்கி
தலையில் ஒத்தியெடுக்கிறது
காட்டில் தொலைத்த
தன் கன்றினை நினைத்தபடி
அந்தக் கோவில் யானை.

**காசாவயல் கண்ணன்.**

ஊசி போட்டதும்
வீறிட்டழும் குழந்தையின்
பின் பக்கத்தை
பதறி தேய்த்த படியே
கலங்கும் கண்களை
மறைக்க முயற்சிக்கும்
அந்த
மூத்த பெண் மருத்துவருக்கு...

ஏனோ
இன்னமும் இல்லை
குழந்தை ....!!

**வணவை தூரிகா.**



அவசரமாய் வளர்ந்து.
அவசரமாய் காதலித்து..
அவசரமாய் மணமுடித்து
அவசரமாய் மனம் ஒடித்து
அவசரமாய் பிரியும்
இன்றைய தலைமுறைக்கு
புரிய வாய்ப்பில்லை தான்..

எப்போதும்
மூன்று தோசை
சாப்பிடும் அப்பா..
அடுப்படியில்
அளவு குறைந்த
மாவு கண்டு,
இரண்டு போதுமென்றே
எழுந்த
அதிகம் பேசிக்கொள்ளாத
அம்மா,அப்பாவின்
அழகிய தாம்பத்யம்..

**வினோத் பரமானந்தன்**



சொல்லாமல் சொல்கிறது
வலிகளும்
அது தேடிக்கொண்ட நிவாரணிகளும்
வாழ்தலுக்கான வழியை..

புதிரான வாழ்வின்
புரியாத பக்கங்களில்
பூக்களைப் போல
மென்மையாய் சில..
முட்களைப் போல
கடினமாய் சில..
புரையோடியிருக்கின்றன..

இதழ்களைப் போல
சத்தமின்றி உதிரவும்
தளிர்களைப் போல
சொல்லிக் கொள்ளாமல்
துளிர்க்கவும் மறக்கவில்லை
இன்னும் இறக்காமல்
இருக்கும் வேர்களின் ஈரம்..

எந்நேரத்திலும் எதுவும்
நிகழச் சாத்தியங்கள்
உண்டென்பது
இல்லாமலிருத்தலை விட
மேலானதாகவே இருக்கிறது..

வேகமும் விவேகமும்
போட்டி போட்டுக்கொள்ள
விறுவிறுப்பாகிறது
வாழ்க்கை மீதான பற்றுதலும்..
காலங்கள் மீதான நம்பிக்கையும்..

இன்னும் இன்னும்
எத்தனை பிரத்யட்சம்
இருக்கிறதோ காலத்தின் கைகளில்..

**சங்கரி சிவகணேசன்**



நான் நட்ட ரோஜாவின் வாசம்
மூக்கைத் தைத்து விடுமென்று
உன் ஜன்னலை மூடாதே

அது உன் அறையை
இருளில் மூழ்கடித்துவிடும்

ரோஜாக்கள் ஒரு போதும்
வாசம் வீசுவதில்லை
ஜன்னலைத் திறந்தே வை...

**ஷப்ரா இல்முத்தீன்**

வனப்பகுதிகளிடையே எப்பொழுதாவது
பயணம் செல்ல நேர்ந்தால்
சிலகணங்களை
செலவழித்துக் கையள்ளி
வாருங்கள்

பேசப்படாத பகிரப்படாத
காலாதீத மரங்கள் உதிர்த்த
பேரமைதியின் பின்
ஒளிந்திருக்கும்
ஆதி மௌனங்களை....

**உமா மஹேஸ்வரி பால்ராஜ்.**



காதலின் போது
எட்டி இருந்து பார்த்தேன்
அழகாக இருந்தாய்
நெருங்கி வந்து பார்த்தேன்
அதை விட அழகாக தெரிந்தாய்

விடிவது தெரியாமல் அல்ல
விடிவது
தெரிந்தும் கட்டியணைத்து கிடந்தோம்

கொஞ்சம் கொஞ்சமாக நான் இளைப்பதாக அம்மா
சொன்னார்
கண்களை சுற்றி கருவளையங்கள் இருப்பதாக
தங்கை சொன்னாள்

இப்போதெல்லாம் தன்னை
சந்திப்பதில்லை என்று
நண்பன் புலம்புகிறான்

அப்பா பேசுவதில்லை
எப்படி மாறினேன்
எல்லாம் நீ வந்த பிறகுதான்

முடிவெடுத்து விட்டேன்
வேறு வழியின்றி
உன்னை பிரிவதென்று

தூக்கி எறிகிறேன்
மன்னித்துவிடு
என் கைபேசியே

**கதிரவன் வீ**

# பரவசக்குமிழ்கள்



உக்கிரமான கோடையின் நண்பகல்
ஒற்றைக்குருவி உட்கார்ந்திருந்த்து
முள்வேலியில்

நீர் வண்ணத்தில் தீட்டப்பட்ட
ஓவியம் போல
அதீத பளபளப்பற்ற வெண்மையில்
தலையிலும் கழுத்திலும்
விடாமலசைத்துக் கொண்டிருந்த வாலிலும்
உடலுடன் ஒட்டியிருந்த சிறகிலும்
கருமைத்திட்டு திட்டாக படிந்திருந்த்து

சிட்டுக்குருவியைப் போலுமில்லாது
மைனாவைப்போலுமில்லாது
பெயர் தெரியாத அந்தக்குருவி
அது அதுவாக இருந்தது

அதைப்பார்த்த அந்த நொடி
உள்ளுக்குள் இருக்க கட்டிய கம்பியை
சுண்டுகையில் எழும் ஒற்றைச்சொட்டாய்
இசையதிர்ந்து
பரவசக்குமிழ்களை வெடிக்க வைத்தது

பரவசத்தை பரிசளித்த அதற்கு
என்னால் பயத்தைத்தவிர
வேறு எதையும் தரமுடியாது
என்று நினைக்கையில்
எழுந்த துக்கம்
வயலினின் உருக்கமான
நீளிசையாய்
நெஞ்சையடைத்தது.

சக்தி அருளானந்தம்.

# திசைமாறிய பறவைகள்



திரைகடல் ஓடித்திரவியம்
தேடியதில்
திசைக்கொன்றாய்
உறவுகள்..
பிறப்பில் இறப்பில்
துன்பத்தில் மகிழ்வில்
தோள் சாய ஆளில்லை...
படிப்பென்பது பணம்
சேர்க்கத்தான்
என்றான பின்
புறந்தள்ளி
நிற்கிறது அனைத்தும்...
உரையாடல்களே
உதாசீனமாகும்
சூழலில்
இடைவெளிகள் நீண்டுகொண்டே போகிறது
இனணய இயலாத
இருப்புப்பாதைகள் போல.

பரமேஸ்வரிசண்முகம்



வெளிச்சம் பரவிக்கிடக்கும் தெருக்களைவிட
இருள் அப்பிக்கிடக்கும் தெருக்களிடம்
ஏராளமான கதைகள்
மறைந்துபோய்க்கிடக்கின்றன.......

அந்தக்கதைகளை சொல்லிவிட விரும்பாத
உதடுகளும்
அவை எதனையும் கேட்டுவிட விரும்பாத
காதுகளும்
ஒவ்வொரு விடியல்களிலும் யாரோ போல
மௌனங்களை பூசிக்கொண்டு
நடமாடித்திரிவதனை
யாருமே அறிந்திருக்கக்கூட மாட்டார்கள்.....

அந்த இருளில் மெல்லிய
ஒளியோடு வாழும்
சில சொல்லப்படாத கதைகள்
தூக்கணாங்கூட்டில் ஒட்டப்படும்
மின்மினிகளைப்போல
வெளியே தெரியப்படாமலே
மக்கிமறைந்தும் போய்விடுகின்றன......

இருண்டதெரு மீது எழுதுவதற்கு
எந்த இரசிப்புக்களும்
இல்லாமல்போகலாம் ஆனால்
அந்த இருளிடம் கேட்பதற்கு இங்கே ஏராளமான
வலிநிறைந்த கதைகள் இருக்கத்தான்
செய்கின்றன .....

**இசைவிழிசந்திரன்** .



ஒரு போதும் வெளுப்பதில்லை
தண்ணீரிலேயே கிடந்தாலும்
மீனின் நிறம்...

**சகா**

இப்போது வந்தமர்ந்த நாரை மீனை தேடவில்லை
குளத்தை
தேடிக்கொண்டிருந்தது.....!!!!

**ச. இராஜ்குமார்**

வெளிச்சத்தை மறைக்கும்
ஒன்றின் கீழ்
வாழ்கிறது நிழல்.

**செ.பாலா**



ஓர் உறவைத் தக்க வைக்க
பல பொய்கள் சொல்லி உன்னை நல்லவனாக்க
வேண்டியதில்லை

பைத்தியக்காரத்தனமான சோதனைகளில்
ஈடுபடவும் வேண்டியதில்லை

அடிக்கடி அழுது
புலம்பவும் வேண்டியதில்லை

யாரையும்
வெறுக்கவோ
சபிக்கவோ வேண்டியுமில்லை

உன்னை நீயே தொலைக்கவும் வேண்டியதில்லை

உன் உறவோடு
உண்மையாக இரு
அதுவே போதும்

உனக்கானதாக இருந்தால்
உன்னை விட்டுப் பிரிந்தாலும்
மீண்டும் உன்னிடமே வந்துவிடும்

உனக்கானதில்லை என்றால்
உன்னோடு எத்தனை காலம்
இருப்பினும் ஓர் நாள் பிரிந்துவிடும்
அவ்வளவுதான்

பெரிதாய் ஒன்றும்
அலட்டிக் கொள்ளாதே...

**ஷபானா ஆதம்லெப்பை**

# கசக்கும் பொழுது



கடுங்காப்பியே உனது பிரியம்
என்கிறாய்...

இரண்டைத் தருவித்து
ஒன்றை என்னிடம்
திணிக்கிறாய்.

உன் கடுங்காப்பிப் பிரியத்துக்கு
வாய் ஓயாது காப்பியம் படித்த வேளையில்
ஒருவார்த்தை என் பிடித்தமும் கேட்டிருக்கலாம் நீ.

சிலபோது
நேசக்கூத்துகள்
இப்படித்தான் கசந்துவைக்கும்

கடுங்காப்பி என்ன செய்யும்..
பாவம்.

**அன்பு மணிவேல்**

பேசக்கற்றுக்கொண்ட
பிறகும்
விடுதலை கேட்பதில்லை...
கூண்டுக்கிளிகளுக்குமிருக்கிறது,
அம்மாவின் சாயல்!

**மு.முபாரக்**

# இருப்பின் எதிரொலிகள்



நினைவு கேலரியில்
ஒவ்வொரு சட்டமும் ஓர் அத்தியாயம்
காலத்தின் கேன்வாஸ் முழுவதும் தெளிவான
காட்சிகளை வரைகிறது
மீண்டும் மீண்டும் வரும் பாத்திரமான
உந்தன் இருப்பு

வாழ்க்கை பக்கங்களைப் புரட்டும் பொழுது
ஸ்கிரிப்ட்டில் எழுதப்பட்ட
உந்தன் சாராம்சம்
பயணக் கதைக்கு ஆழத்தைக் கொண்டு வருகையில்
ஒவ்வொரு அத்தியாயமும் விரிவடைகிறது
இன்னொரு அத்தியாயமாக

அத்தியாயங்கள்
மனதின் திரையில் சரித்திரமாய்ப் பின்னுகின்றன
ஒரு கதையை
காலத்தால் அழியாத கதைக்கு
உணர்ச்சியைச் சேர்க்கிறது
உந்தன் செல்வாக்கு

கேமியோவான நீ
ஒவ்வொரு காட்சியிலும் ஓர் அழியாத அடையாளத்தை
விட்டுச் செல்லும் தருணங்கள்
விளையாடுகின்றன உணர்வின் மேடையில்

அவை
மனதின் தாழ்வாரங்களில் அலையும் பொழுது
சிந்தனை பிரபஞ்சத்தை ஒளிரச் செய்யும்
நிலையான நட்சத்திரமாகிறாய்
நீ.

பிரியா பாஸ்கரன்

# சங்கமம்



என்ன நிகழ்ந்திருக்கும்
அடுத்த யுகத்தின் ஆரம்பங்களை எதிர்நோக்கி
கடந்துசெல்லும் காலத்திற்கு பதிலளிக்க விதியற்று
பரிணாமங்களை அளந்து
ஞானத்தின் வேரைத்தேடி
சூட்சுமங்களின்
முடிச்சவிழ்த்து
உலக சங்கமத்தின் கைகளைப் பற்றியிழுத்து
காலச்சுவட்டின்
தூரவிளிம்பில்
கடலின் அலைகள் மோதித் திமிறும்
கரைகளென
ஒரு சித்திரம் வரைந்து செல்கிறது
உயிர்த்தாமரையின் நீள் காம்புகள்...

**லக்ஷ்மி**

நிரம்பிய மனிதத்தலைகள்
ஆமையாய் நகர்வுகள்
ஏசியில் குளித்த தளமெங்கும்
வியர்வையில் கசக்கப்பட்டு
மலையாய் துணிகளை
புன்னகை மாறாமல்
பரபரப்பாய் மடித்து அடுக்கி
பண்டிகை பம்பரச் சுழற்சியில்
கல்லாப் பெட்டி வயிறுகள்
அறியாமல் நிரம்புகின்றன
வறுமைக் கரையான்கள் அரித்து
அந்த நாட்களில் நின்று சலித்து
துவைத்து எடுக்கப்பட்ட கால்களை

**கோவை புதியவன்**

வரலாற்றுச் சிறப்புமிக்க கவிதைப் போட்டி வெள்ளி இரவு தொடங்கி ஞாயிறு இரவு (26-11-2023) 12 மணிக்கு முடிகிறது. இதில் பங்கு பெற்று வரலாற்றுச் சிறப்புமிக்க சுற்றுலாவிற்கு செல்லும் வாய்ப்பை பெறுங்கள் உங்கள் இலக்கியத்தின் மூலம்....



படைப்பு



# கவிக்கோ

## பிறந்தநாள் பரிசுப்போட்டி - 2023

பரிசு

1 லட்சம் ரூபாய்

போட்டி நாள்

25-11-2023 to 26-11-2023

போட்டியில் பங்குபெற

padaippu.com

கவிதைக்கான கரு : ஜென் அல்லது தத்துவார்த்த கவிதைகள்

போட்டியின் சிறப்பம்சம் : பனையூர் to பாஷோ – ஜப்பான் பயணம்

முதல் பரிசு பெறுவோர் கவிக்கோவின் நினைவிடமான சென்னை பனையூரில் இருந்து பாஷோவின் நினைவிடமான ஜப்பான் வரை ஒரு கவியின்பச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லப்படுவார்.